மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : 1961-ஆம் ஆண்டுத் தொழில் பழகுவோர் சட்டத்தின் விதித் துறைகளை விளக்குகையில், தொழில் பழகுவோர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்களின் வாயிலாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தொழிலதிபர்களைக் கட்டாயப் படுத்த இயலாதென மட்டுமே 1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இந்திய அரசு வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை இயக்குநருக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, கட்டாயப்படுத்த வேண்டா மென்று மத்திய அரசு சொன்னதற்கான காரணங்கள் யாவை? இந்த அரசினுடைய கணிப்பிலே அது சரியான யோசனை என்று கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தொழிற்சாலைகளிலே 'அப்பரன்டிஸ் ஆக்ட்' படி 'அப்பரன்டிஸ்' எடுக்கப்படுகிறார்கள். இந்த 'அப்பரன்டிஸ்'கள் இப்போது எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேன்ஞ் மூலம் எடுக்கக் கட்டாயப்படுத்த விரும்பவில்லையென்று தான் தெரிகிறது. ஆங்காங்கு உள்ள ஐ.டி.ஐ. நிறுவனத்தை நடத்துகிறவர்கள் அடிக்கடி இந்தத் தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்த்து, 'கோ ஆர்டினேஷன்' மூலம் இந்த அப்பரன்டிசை ஐ.டி.ஐ. பயிற்சிப் பள்ளியிலிருந்து எடுக்கக்கூடிய ஒரு முயற்சியை நாம் செய்து வருகிறோம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... THE ALONE TRIUMPHS

Industrial Refinery

*33. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Industrial Development Corporation has applied for the issue of a licence for opening an Industrial Refinery in Tuticorin ; and

(*b*) if so, the details thereof?

தொழிற் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடியில் தொழிற் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை (Industrial Refinery)ஒன்றைத் தொடங்குவதற்கு உரிமம் வழங்கும்படி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விண்ணப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கு முன்னுரிமை பெற தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

Self-employment Scheme

* 34 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the number of persons who received assistance during 1971–72 under self-employment scheme, introduced by the Government in Salem district;

(*b*) the amount disbursed to them;

(*c*) the amount earmarked for this purpose during 1971-72; and

(*d*) whether the scheme is found fruitful?

சொந்தத் தொழில் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டத்தில் அரசால் தொடங்கப்பட்ட சொந்தத் தொழில் திட்டத்தின் கீழ் சென்ற நிதியாண்டில் (1971-72) உதவி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) இதற்காகச் சென்ற நிதியாண்டில் (1971-72) ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(எ) இத்திட்டம் பயனளித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஒருவருமில்லை.

(இ) ஏதுமில்லை.

(உ) ரூ. 2,00,000.

(எ) தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் பயின்று வேலையின்றி இருக்கும் 3,000 பேருக்கு தலா ரூ. 1,000 பெறுமான கருவிகளும் உபகாரணங்களும் கொடுத்து அவர்கள் சுயமாக வேலை ஏற்றுச் செய்வதற்கான ஒரு திட்டத்திற்கு அரசு 1971-ஆம் ஆண்டு ஒப்பளித்தது. அண்மையில் இத்திட்டத்தை மறு